02.07.2026

OS. No.**95/2025**

**வா.சா.1 –** திருமதி. அழகு க/பெ. ராஜு

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

தாவாவில் கண்ட A அட்டவணை சொத்தைப் பொறுத்துதான் எனக்கும் கிருஷ்ணமூர்த்திக்கும் இடையில் பிரச்சனை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக கிருஷ்ணமூர்த்திக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன். அந்த ஆவணத்தையும் தாக்கல் செய்து இருக்கிறேன். முதல் பிரதிவாதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதிக்கு தாவாவில் கண்ட A அட்டவணை சொத்தை கடந்த 06.07.2016 அன்று கிரையம் எழுதி பதிவு செய்யாமல் வழங்கியதால் அவருக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கில் காலிமனையில் கடந்த 2021-ல் கட்டிடம் கட்டியதாக கூறியிருந்தாலும் எந்த மாதத்தில் அவ்வாறு கட்டிடம் கட்டினேன் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை. 2021-ல் எந்த மாதம் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது என்பதையும், வீட்டு வரி ரசீது எந்த மாதத்தில் பெற்றேன் என்பதையும், 2021 ஆம் வருடத்தில் எந்த மாதத்தில் மின் இணைப்பு பெற்றேன் என்பதையும் வழக்கிலும் சத்தியபிரமான வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் என் தரப்பு பிரதான கட்சி என்பது 2021 ஆம் வருடத்தில் காலி மனையில் கட்டிடம் கட்டி முதல் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்திக்கு வாடகைக்குக் கொடுத்தேன் என்பது ஆகும். சொத்து வரி 2021 ஆம் வருடத்தில் இருந்து நாளது தேதி வரை நான்தான் செலுத்தி வருகிறேன் என்பதை

காண்பிக்கக் கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாவில் கண்ட A அட்டவணை சொத்தில் என்ன கூரை போடப்பட்டுள்ளது என்றால் ஆஸ்பெஸ்டாஸ் கூரை போடப்பட்டுள்ளது. அதை ஒரு பாய் நடத்தி வருகிறார். அவரது பெயர் எனக்குத் தெரியாது. தாவாவில் கண்ட A அட்டவணை சொத்தின் மின் இணைப்பு எண் தெரியாது. அது எந்த கடையில் அமைந்து இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது என்றால் மூர்த்தி கடையில் இருக்கிறது. தாவாவில் கண்ட A அட்டவணை சொத்தைப் பொறுத்து 06.07.2016 –ல் முதல் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக் கொடுத்ததை மறுத்தோ ஆட்சேபித்தோ எந்த கட்சியும் செய்யவில்லை என்றால் மறுக்கிறேன். தாவா A அட்டவணை சொத்தை முதல் பிரதிவாதி உரிமையாளராக அனுபவித்து வருகிறார் என்றும் அவருக்கும் எனக்கும் இடையில் வாடகைதாரர் உறவு கிடையாது என்றால் சரியல்ல. தாவா A அட்டவணை சொத்தை பத்திரம் பதிவு செய்ய முடியாது என்றால் சரிதான். தாவா A அட்டவணை சொத்தை முதல் பிரதிவாதி'க்கு ரூ.2,50,000/–க்கு கடந்த 06.07.2016 –ல் விற்பனை செய்துவிட்டு அதற்கான கிரைய பத்திரத்தை பதிவு செய்ய இயலாத காரணத்தினால் பதிவு செய்யப்படாத ஆவணமாக எழுதிக்கொடுத்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா A அட்டவணை சொத்து அரசு புறம்போக்கு வகைப்பாட்டிலிருந்து பட்டா நிலமாக வகைப்படுத்தும்போது நானும் எனது வாரிசுகளும் முதல் பிரதிவாதிக்கு கிரையப்பத்திரம் எழுதிக் கொடுத்து பதிவு செய்து கொடுக்கவும் கடமைப்பட்டு இருக்கிறோம் என்றால் சரியல்ல. 06.07.2016 அன்று கிரையம் 1–ம் பிரதிவாதிக்கு எழுதி வழங்கிய பிறகு முதல் பிரதிவாதி தாவா A அட்டவணை சொத்தைப் பொறுத்து சுவாதினத்தில் இருந்து கட்டிடம் கட்டி கடந்த 2018 – ல் மின் இணைப்பை எனது பெயரில் மூல பதிவு ஆவணம் உள்ளதால் பெற்று அவர் முழு உரிமையாளராக சர்வ சுதந்திர பாத்தியத்துடன் அனுபவித்து வருகிறார்

என்றால் சரியல்ல. கடந்த 2016–ல் தாவா A அட்டவணை சொத்தில் ஒரு பகுதியில் கட்டிடம் கட்டியும், பின்னர் 2020 ஆம் வருடத்தில் மற்ற பகுதிகளில் கடைகளும் வீடுகளும் கட்டி அவர் சகல உரிமைகளுடன் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் கட்டிடம் கட்டியதாக கூறுவதை காண்பிப்பதற்கு ஆவணம் இல்லை. நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தபோது அவர்கள் விசாரணை செய்தார்கள். முதல் பிரதிவாதியும் அந்த விசாரணையின் போது ஆஜர் ஆனார். காவல் துறையினர் நான் கிரையம் எழுதி வழங்கியதால் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று தெரிவித்தார்கள் என்றால் சரியல்ல. தாவா அட்டவணை சொத்து முழுவதும் அரசு புறம்போக்கு நிலம் என்றுச் சொன்னால் சரியல்ல. எனவே அரசை தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் வழக்கு நிலைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. என் வழக்கு செலவுக்குத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

( ஒம்.), XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.